**CC.NO. 417/2011 PW-1**

நாள் : 25.03.2025

பெயர் : காளிதாசன்

த/பெ : மீனாட்சி சுந்தரம்

**(4 ம் எதிரி ஆஜர், 2, 3, 5, 6, 7 எதிரிகள் ஆஜரில் இல்லை, 2, 3, 5, 6, 7 எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 1 ம் எதிரி இறந்துவிட்டார்)**

**2 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நீங்கள் தான் புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரி என்றால் ஆமாம். எந்த தேதியில் வழக்கு தொடர்பான சம்பவம் நடைபெற்றது என்றால் 15.12.2010 அன்று நடைபெற்றது. சம்பவ இடத்திற்கு நீங்கள் எவ்வாறு சென்றீர்கள் என்றால் தகவல் கிடைத்தது அதன் அடிப்படையில் நாங்கள் இரு குழுக்களாக சென்றோம். அந்த இரு குழுக்களும் என்னுடைய தலைமையில் தான் செயல்பட்டது. சம்பவம் எங்கு நடைபெற்றது என்றால் காரை - புளியங்கண்ணு சாலையில் நவ்லாக் பகுதியில் சம்பவம் நடைபெற்றது. எத்தனை மணிக்கு சம்பவ இடம் சென்றீர்கள் என்றால் 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்றேன். இரண்டு அரசு வாகனங்களில் நாங்கள் சம்பவ இடம் சென்றோம்.

புகார் மற்றும் உங்களுடைய விசாரணை அறிக்கையில் இரு குழுக்களாக இரண்டு அரசு வாகனங்களில் சென்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் ஆமாம். உங்களது அலுவலகம் எங்கு உள்ளது என்றால் இராணிப்பேட்டையில்

அமைந்துள்ளது. சம்பவ இடத்திற்கும் உங்கள் அலுவலகத்திற்கும் இடையில் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 கி.மீ இருக்கும். சுமார் அரை மணிநேரத்திற்குள் சம்பவ இடம் சென்றுவிடலாம் ஆனால் நாஙகள் இடைப்பட்ட நேரத்தில் தொடர் அரசு பணி மேற்கொண்டு சென்றதால் அவ்வளவு நேரம் பிடித்தது.

07.00 மணிக்கு அலுவலகத்திலிருந்து கிளம்பிய நீங்கள் 11.30 மணிக்கு தான் சம்பவ இடம் சென்றுள்ளீர்கள் இடைப்பட்ட நேரத்தில் என்ன என்ன அலுவலக பணி மேற்கொண்டிர்கள் என்ற விவரம் சொல்லப்படவில்லை என்றால் ஆமாம். சம்பவ இடமானது பொதுமக்கள் குடியிருப்பு மற்றும் போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் ஆமாம். நீங்கள் சென்ற சமயத்தில் வெள்ளை நிற ஆம்னி மாருதி கார் ஒன்று சாலையை கடக்க முயன்றதாக சொல்லியுள்ளீர்கள் உங்கள் துறை ஊழியர்களை தவிர தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் நீங்கள் எந்த வழக்கு சொத்தையும் கைபற்றவில்லை என்றால் ஆமாம். தனிநபர் சாட்சிகள் ஏன் சேர்க்கப்படவில்லை என்றால் அவர்களுடைய பங்களிப்பு தேவைப்படாத காரணத்தினால் அவர்களை நான் சாட்சியாக சேர்க்கவில்லை.

சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்திருப்பீர்கள் என்றால் 12.30-1.00 மணி வரை இருந்தோம். யார் முன்னிலையில் என்னென்ன வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்றால் வன காப்பாளர் ரேணுகோபால் படிவம் H தயார் செய்தார் அதே போல் அரசு கைபற்றுதல் மகசரை வன காப்பாளர் ஆறுமுகம் தயார் செய்தார்.நீங்கள் தாக்கல் செய்த படிவம் H ல் யாரிடமிருந்து வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். யாரிடமிருந்து வழக்கு சொத்து கைபற்றப்பட்டது என்று அரசு தரப்பு மகசரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்

ஆமாம். படிவம் 95 ல் கூட வழக்கு சொத்தின் அடையாளம் தான் சொல்லப்பட்டுள்ளது யாரிடமிருந்து கைபற்றப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் ஆமாம்.

படிவம் 95 எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் என் அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது. மேற்சொன்ன விவரத்தை படிவம் 95 ல் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. படிவம் 95 ல் வழக்கு சொத்தின் எடை 10 கி என்று சொல்லப்பட்டுள்ளது வழக்கு சொத்தின் எடையை எவ்வாறு கணக்கு செய்தீர்கள் என்றால் எடை போட்டு தான் கணக்கு செய்தேன். எங்கு வைத்து எடை போடப்பட்டது என்றால் என் அலுவலகத்தில் வைத்து போடப்பட்டது. அலுவலகத்தில் வைத்து தான் எடை போடப்பட்டது என்ற விரவத்தை ஆவணங்களில் சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட வரைபடம் தோராய வரைபடம் என்றால் ஆமாம்.

11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று 11.50 மணிக்குள் எப்படி 4 எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தீர்கள் என்றால் 4 அலுவலர்கள் 4 எதிரிகளிடம் தனிதனியாக பதிவு செய்தார்கள். சட்ட முறைப்படி நீங்கள் எதிரிகளிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கைபற்றப்பட்ட வழக்கு சொத்துக்கள் என்ன ஆனது என்றால் வன பாதுகாப்பு சட்டதின் படி அதில் உள்ள முறைகள் பின்பற்றப்பட்டு இறுதியாக அரசுடைமையாக்கப்பட்டது. இறுதி அறிக்கையில் வழக்கு சொத்துக்கள் அரசுடைமையாக்கப்பட்ட விரத்தை குறிப்பிட்டுள்ளீர்களா என்றால் எனக்கு அடுத்த வந்த அதிகாரி அந்த தகவலை பதிவு செய்ய விட்டுவிட்டார். கைபற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை புகைப்படம் எடுத்து

வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை.

சிப்காட் காவல் நிலையத்தில் உங்கள் தரப்பில் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் சிப்காட் போலீசார் சிசி 390/2011 மாவட்ட உரிமையியில் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இராணிப்பேட்டையில் வழக்காக தாக்கல் செய்யப்பட்டது அந்த வழக்கில் நீங்கள் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலமும், கைபற்றதல் மகசரும் தான் முன்னிலைப்படுத்தப்பட்டன என்றால் சரியல்ல. கைபற்றுதல் மகசரில் கண்டுள்ள வழக்கு சொத்துக்களான மரங்கள் எங்கு எங்கு வெட்டப்பட்டவை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். ஆனால் வெட்டப்பட்ட மரங்கள் அனைத்தும் அட்டவணை மரங்கள் ஆகும் அதை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்து செல்வதே குற்றமாகும்.

வன சரகத்தில் உள்ள மரங்களுக்கு அடையாள குறியீடு செய்வதுண்டு என்றால் இல்லை. நீங்கள் கைபற்றிய மரங்களுக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் 25 வயது இருக்கும். இறுதி அறிக்கையில் மரங்களின் வயது குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால் இல்லை. இறுதி அறிக்கையை எந்த படிவத்தின் அடிப்படையில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்கள் என்றால் அ படிவம் அடிப்படையில் தாக்கல் செய்தேன். நீங்கள் தாக்கல் செய்த படிவம் அ அடிப்படையிலான வழக்கு சுருக்குமுறை வழக்கு அந்த வழக்குகள் ஆறு மாதகாலத்திற்குள் முடிக்க வேண்டும் என்றால் சரியல்ல. 15.12.2010 வழக்கு பதிவு செய்த நீங்கள் 11.06.2011 அன்று தான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் ஆமாம்.

நீங்கள் தாக்கல் செய்த இறுதி அறிக்கை காலதாமதாக தாக்கல் ஆகியுள்ளது

என்று நீதிமன்றதால் திருப்பப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நீங்கள் இறுதி அறிக்கையை மீண்டும் நீதிமன்றதில் தாக்கல் செய்த போது கூட காலதமத்திற்கான காரணத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஆமாம். நீங்கள் சொல்வது தவறு நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை வழக்க சொத்து எதுவும் கைபற்றபடவில்லை உங்களால் ஏற்பட்ட இழப்பை சரிசெய்வதற்காக எதிரிகள் மீது ஒரு பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டு தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

**7 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

7 ம் எதிரியை எதன் அடிப்டையில் வழக்கில் நீங்கள் சேர்த்துள்ளீர்கள் என்றால் விசாரணையின் அடிப்படையில் சேர்த்துள்ளோம். ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சேர்க்கவில்லை என்றால் ஆமாம்.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

NAVEEN DURAIBABU Digitally signed by NAVEEN DURAIBABU

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.